# பொங்கல் அர்ச்சிப்பு

**பணி**: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!
**எல்**: உம்மோடும் இருப்பாராக!

**பணி**: சகோதர, சகோதரிகளே, பொங்கல் விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இவ்வேளையிலே, மகிழ்ச்சிக்கெல்லாம் ஊற்றாகிய கடவுளை நினைத்து, அவர் நமக்கு அளித்துள்ள அருங்கொடைகள் அனைத்திற்காகவும் அவருக்கு நன்றிகூறுவோம்.

**குரு**: என்றும் வாழும் தந்தாய்! உம் ஞானமும் பேரன்பும் விளங்க, இவ்வுலகத்தைப்படைத்து, மனிதனை அப்படைப்பின் சிகரமாய் வைத்து, அவனை அதன் ஆளுனனாக ஏற்படுத்தியதற்காக.
**எல்**: ஆண்டவரே, உமக்கு நன்றி கூறுகிறோம்.

**குரு**: உழைக்கும் கரங்களுக்கு ஆற்றல் மிக அளித்து உமது படைப்பின் வளத்தை மக்களனைவரும் பெற்று மகிழச் செய்வதற்காக.
**எல்**: ஆண்டவரே, உமக்கு நன்றி கூறுகிறோம்.

**குரு**: எமக்கு நல்ல மழையைத் தந்து, நிலத்தை வளப்படுத்தி, நிரம்ப பலனைத் தந்ததற்காக.
**எல்**: ஆண்டவரே, உமக்கு நன்றி கூறுகிறோம்.

**குரு**: எங்கள் உழைப்பை ஆசீர்வதித்து, எங்கள் வாழ்வில் நிறைந்த மகிழ்ச்சியையும், அமைதியையும் அளித்ததற்காக,
**எல்**: ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறோம்.

**குரு**: பொருள் வளம் தந்து அதன் வழியாக அருள் வளமும் அளித்தமைக்காக,
**எல்**: ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறோம்.

**குரு**: அனைத்தையும் படைத்த இறைவா! படைப்புப் பொருள் யாவும் உமதே. எங்களது உழைப்பின் மூலம் உமது படைப்பு அலுவலில் பங்கு தந்து, அதன் பலனைத் துய்க்கும் பேற்றையும் தந்து, உமது அருளை என்றும் போற்றிப் புகழ வாய்ப்பளித்ததற்காக எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உமக்கு நன்றி கூறுகிறோம்.
**எல்**: ஆமென்!

**பணி:** மன்றாடுவோமாக, நன்மைகளுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவா! உழவர்களுக்கும், அவர்களது உழைக்கும் கரங்கள் மூலம் எங்களுக்கும், நீர் அளித்துள்ள அருட்கொடைகளுக்கெல்லாம் நன்றி செலுத்துகிறோம். எங்கள் நன்றியின் அடையாளமாக நாங்கள் உமக்கு படைக்கும் அறுவடையின் முதற்கனியாலான இப்பொங்கலை *(அல்லது அறுவடையின் முதற்கனியான இப்பொருட்களை)* + ஆசீர்வதித்தருளும். எங்களுக்கு உழைக்கும் திறனையும், அதன் பலனையும் நிரம்பத்தந்து, வளம் மிக்க எம் நாட்டை, அன்பும், நீதியும், அமைதியும், ஒற்றுமையும், பகிர்வும் கொண்ட நல்மனம் படைத்த மனிதர்களின் நாடாக்குமாறு எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
**எல்:** ஆமென.;

(பீடத்தின் முன் படைக்கப்பட்ட பொங்கல், கரும்பு, மஞ்சள் போன்ற விளை பொருட்கள் மீது தீர்த்தம் தெளிக்கிறார்.